

புதுக்கோட்டை மாவட்ட வரலாற்று ஆவணக்குழு செய்தி மலர்

மலர் 6 ஆகஸ்டு-1989

புதுக்கோட்டைக்கு காவேரி தண்ணீர்!

❋ வானம் பார்த்த பூமியாகிய புதுக்கோட்டைக்கு காவேரித் தண்ணீரைக் கொண்டுவர பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் இதற்கு நீண்ட வரலாறு உண்டு! இது பற்றிய திட்ட ஆய்வுகள் 1837ம் ஆண்டில் தொண்டைமான் மன்னர் ராஜா விஜயரெகுநாத தொண்டைமான் காலத்தில் தொடங்கப்பட்டது. கொடுமுடியிலிருந்து, குளத்தூர் வழியாக புதுக்கோட்டைக்கு காவேரி தண்ணீரைக் கொண்டுவர ஒரு கோடி ரூபாய் செலவு பிடிக்கும் ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. அறந்தாங்கி நீங்கலாக உள்ள புதுக்கோட்டை பகுதி சமஸ்தானமாக - தனியரசாக இருந்தது. அப்போது தமிழகத்தின் பிற பகுதிகள் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. திருச்சி, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மாவட்டப் பகுதிகளின் வழியாக இத்திட்டத்தின் மூலம் தண்ணீர் கொண்டுவர ஆகும் செலவினை சென்னை (ஆங்கிலேய) அரசு ஏற்றுகொள்ளுமென்றும், புதுக்கோட்டை எல்லைக்குள் ஆகும் கால்வாய் அமைப்புச் செலவை புதுக்கோட்டை (சமஸ்தான) தனியரசு ஏற்கும் என்றும் கருதப்பட்டது. ஆனால் இதில் ஆங்கிலேய அரசு ஆர்வம் காட்டவில்லை. புதுக்கோட்டை அரசே இத்திட்டச் செலவு முழுவதையும் ஏற்க போதிய நிதிவசதி இல்லாததால் திட்டம் ஒத்திப்போடப்பட்டது.

❋ கடும் வறட்சியினால் புதுக்கோட்டை பாதிக்கப்படும்போதெல்லாம் காவேரி நீர் கொண்டு வரும் திட்டம் தீவிரமாக பேசப்படுவது வழக்கமாகவே இருந்து வந்தது. 1906 – 1907 ஆம் ஆண்டுகளில் ஆங்கிலேய அரசு தனது ஆட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு நீர்பாசன வசதிக்காக காவேரி தண்ணீரை கொண்டுவர ஏழு திட்டங்களை பரிசீலனை செய்தது. இத்திட்டங்களின் மூலம் புதுக்கோட்டைக்கு பயன் ஏதும் கிட்டுமா என்பதை புதுக்கோட்டை அரசு பரிசீலனை செய்தது. இந்த திட்டங்களின் மூலம் புதுக்கோட்டைக்கு காவேரி தண்ணீரைக் கொண்டுவரும் சாத்தியக் கூறுகள் மிகவும் குறைவாக இருந்ததால் இம்முயற்சிகளும் கைவிடப்பட்டன.

❋ தஞ்சை மாவட்ட எல்லைக்குட்பட்ட அறந்தாங்கி பகுதிக்கு காவேரி மேட்டூர் கால்வாய் திட்டம் செயல்படுத்தப்பட்டபோது, அக்கால்வாய் புதுக்கோட்டை எல்லைக்குள் கரம்பக்குடி வழியாக கொண்டு செல்லப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதன் பயனாக ஆலங்குடி வட்டத்தில் சுமார் 8000 ஏக்கர் பாசன வசதி பெறும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. இது குறித்து அரசு தீவிர முயற்சிகள் மேற்கொள்ளவே செய்தது. ஆனால் புதுக்கோட்டை எல்லைக்குள் கால்வாயை கொண்டு செல்லும் திட்டத்தை செயல்படுத்த ஆங்கிலேய அரசு உடன்படவில்லை. முயற்சிகள் தொடர்ந்தன...... ....

❋ அலக்சாண்டர் டாட்டன்ஹாம் புதுக்கோட்டையில் ஆட்சியாளராக இருந்தபோது 1935ஆம் ஆண்டு கடுமையான வறட்சி ஏற்பட்டது. வாடிக்கையான வறட்சி நிலையை சுட்டிக்காட்டி, கரம்பக்குடிக்கு அருகில் ஓடும் மேட்டூர் கால்வாயிலிருந்து ஏதாவது ஒரு சாதகமான இடத்திலிருந்து முடிந்த அளவு தண்ணீர் வழங்க வேண்டுமென டாட்டன்ஹாம் சென்னை (ஆங்கிலேய) அரசைக் கேட்டுக்கொண்டார். தமிழ்நாட்டு பகுதிகளுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த தண்ணீரிலிருந்து எவ்வளவு வேண்டுமானாலும் சென்னை (ஆங்கிலேய) அரசு, புதுக்கோட்டைக்கு அளிப்பதில் தங்களுக்கு

ஆட்சேபனை இல்லை என்று மைசூர் அரசும் புதுக்கோட்டைக்குத் தெரிவித்திருந்தது. ஆனால் மேட்டூர் கல்வாயிலிருந்து புதுக்கோட்டைப் பகுதிக்கு தண்ணீர் எதுவும் கொடுக்க இயலாது என சென்னை அரசாங்கம் தெரிவித்ததோடல்லாமல் கீழ்க்கண்ட கருத்தையும் தெரிவித்திருந்தது. கட்டளைக் கால்வாயிலிருந்து சாதகமானதொரு இடத்திலிருந்தோ அல்லது கல்லணையின் கிளைகளான ஓலவயல் - அலிவலம் கால்வாயிலிருந்தோ புதுக்கோட்டைக்கு காவேரி தண்ணீரைக் கொண்டு செல்ல இயற்கை அமைப்புகள் சாதகமாக உள்ளன. கட்டளைக் கால்வாய் பாயும் பகுதிகளுக்கு பாசன வசதி செய்யும் அளவிற்கே இக் கால்வாய் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இக்கால்வாயிலிருந்து புதுக்கோட்டை எல்லைக்கு தண்ணீர் கொண்டுவர 25 மைல் தூரத்திற்கு புதிய கால்வாய் அமைக்க வேண்டும். மேலும் ஏற்கனவே உள்ள கால்வாய் 35 மைல் தூரத்திற்கு அகலப்படுத்தப்படவேண்டும். இத்திட்டத்தை செயல்படுத்த பெரும் பொருட் செலவு ஆகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே இத்திட்டத்தை பரிசீலனை செய்யும் சாத்தியக் கூறுகள் இல்லை. ஓலவயல் கால்வாயிலிருந்து பாயும் தண்ணீரிலிருந்து 301,000 ஏக்கர் நிலப்பரப்பிற்கு மட்டுமே பாசன வசதி செய்து கொள்ள மைசூர் அரசுடன் ஒப்பந்தம் இருப்பதால், இதற்கு மேல் ஆயக்கட்டுப் பகுதியை விரிவாக்க முடியாத நிலையில், புதுக்கோட்டைப் பகுதிக்கு பாசன வசதி செய்ய ஓலவயல் கால்வாயிலிருந்து குறைந்த அளவு தண்ணீர் கூட கொடுக்க இயலாது என தெரிவித்தது. இது தொடர்பாக மீண்டும் மைசூர் அரசுடனும் புதுக்கோட்டை அரசு தொடர்பு கொண்டது. ஆனால் பயனேதும் இல்லை. இப்படியாக நம்பிக்கை இழந்த நிலையில் காவேரி தண்ணீர் புதுக்கோட்டைக்கு வராதா என மக்கள் தொடர்ந்து ஏக்கப் பெருமுச்சுடனே இருந்தனர்! இருக்கின்றனர்!!

(ஆதாரம்: புதுக்கோட்டை தர்பார் பதிவுகள்)

புதுக்கோட்டைக்கு காவேரி தண்ணீர் கொண்டு வருவது குறித்து மக்களின் உள்ளக்கிடக்கையை புதுக்கோட்டை சட்டமன்ற (Legislative Council) உறுப்பினர்களும் பிரதிபலித்து வந்தனர். இது தொடர்பாக புதுக்கோட்டை சட்டமன்றத்தில் 1928, 1930 1936, 1937, 1938-ஆம் ஆண்டுகளில் நீண்ட விவாதங்கள் நடைபெற்றுள்ளன. ஆங்கிலேய அரசுடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தும் புதுக்கோட்டை மக்களுக்கு காவேரி நீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தருவதற்கு ஆங்கிலேய அரசு ஆர்வம் காட்டாதது குறித்து உறுப்பினர்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர். அரசு இடையராது சென்னை அரசை வற்புறுத்தவேண்டுமென்றும், திட்டத்திற்குத் தேவையான செலவினை மக்களிடமிருந்தே கடன் நிதியாகப் பெறலாம் எனவும் ஆலோசனைக் கூறினர். (காண்க:- புதுக்கோட்டை சட்டமன்ற குறிப்புகள் 1928, 1935, 1936, 1937, 1938 நன்றி; என். துரைசாமி வரலாற்றுத்துறை பேராசிரியர், மன்னர் கல்லூரி, புதுக்கோட்டை)

புதுக்கோட்டை இந்தியாவுடன் இணைந்த பிறகு மீண்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதன் பயனாக 1950ம் ஆண்டு ஓலவயல் கால்வாயிலிருந்து ஆலங்குடி வட்டத்தில் சுமார் 2300 ஏக்கர் பாசன வசதி பெறும் வண்ணம் ஒரு திட்டம் நிறைவேற்றப்பட்டது. (காவேரி மேட்டூர் கால்வாயின் மூலம் அறந்தாங்கி பகுதியில் 10,900 ஹெக்டேர் நிலம் பாசன வசதி பெறுகிறது. இதில் கறம்பக்குடி ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் 1660 ஹெக்டேர் நிலம் பாசன வசதி பெறுகிறது) ஓலவயல் கால்வாயிலிருந்து ஏற்கனவே உள்ள ஆயக்கட்டுப்பகுதிகளுக்கு தண்ணீர் வசதியளிப்பதிலேயே இடர்பாடுகள் இருப்பதால், புதிதாக ஆயக்கட்டுப் பகுதிகளைச் சேர்க்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. காவேரி தண்ணீர் பங்கீடு பற்றி சமீபத்திய நிலவரங்கள் நாம் அறிந்ததே! இருப்பினும் இந்நிலையில் புதுக்கோட்டை பகுதியின் வாடிக்கையான வறட்சியை போக்கவும் குடிதண்ணீர் வசதிக்கும் தற்போது காவேரி தண்ணீர் கொண்டு வரும் திட்டத்தை செயல்படுத்த ஆவன செய்ய அரசும் ஆர்வம் கொண்டுள்ளது.

பகீரதனின் கடுந்தவத்தால் ஆகாயத்திலிருந்து கங்கை கீழிறங்கி வந்தது! புதுக்கோட்டை மக்களின் கனவை நனவாக்க காவேரித் தண்ணீர் புதுக்கோட்டைக்கு வருவது எந்நாளோ?

❋ 1890ல் புதுக்கோட்டை தனியரசில் படித்தவர்கள்: ஆண்கள் 14.75% பெண்கள்:- 0.30% இவர்களுள் ஆங்கிலம் பயின்றவர்கள் ஆண்கள் - 0.82% பெண்கள் 0.10% 1971 ல் புதுக்கோட்டையில் படித்தவர்கள் எண்ணிக்கை ஆண்கள்: 46.32% பெண்கள் 17.18%.

❋ இந்திய சமஸ்தான மன்னர்களின் தகுதிக்கு ஏற்ப குண்டுகள் முழங்கி மரியாதை அளிக்கும் பழக்கத்தை ஆங்கிலேய அரசு ஏற்படுத்தி இருந்தது. புதுக்கோட்டை மன்னர்களுக்கு 11 குண்டுகள் முழங்கியும், மைசூர் உடையார் மன்னர்களுக்கு 22 குண்டுகள் முழங்கியும் மரியாதை அளிக்கப்பட்டது. ஆனால் புதுக்கோட்டை சமஸ்தானத்திற்கு பிற சமஸ்தானங்களுக்கில்லாத பல சிறப்பு சலுகைகள் அளிக்கப்பட்டிருந்தன.

புதுக்கோட்டையில் இசை மழை

❋ புதுக்கோட்டையில் வறட்சி! தண்ணீர் பெற மழைக்கு பஞ்சம்! ஆனால் இசை மழைக்கு பஞ்சமில்லை!!.

❋ தமிழ்நாட்டு இசைக் கலைக்கு ஏன் இந்தியாவின் இசைக் கலைக்கே உயிர் மூச்சாகக் கருதப்படும் இசை பற்றிய கல்வெட்டு புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் உள்ளது. கர்நாடக இசையின் ராகத்திற்கு-சரிகம பதநி-என்ற எழுத்துக் குறியீடுகளை இக்கல்வெட்டு அறிமுகம் செய்கிறது. இக்கல்வெட்டு 13'×14' அளவில் அங்குள்ள மேலைக்கோயில் எனப்படும் குகைக்கோயிலின் முகப்பில் செங்குத்தான பாறையில் வெட்டி வைக்கப்பட்டுள்ளது. இக்கல் வெட்டு கி. பி. ஏழாம் நூற்றாண்டில் பல்லவ மன்னன் மகேந்திர வர்மனால் வெட்டுவிக்கப் பட்டது எனக் கருதப்பட்டது. ஆனால் இது குறித்த அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது. தற்போதைய ஆய்வுகளின்படி இந்த கல்வெட்டு கி. பி. 9-ம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனக் கருதப் படுகிறது.

❋ குடுமியான்மலைக் கல்வெட்டில் காணப் படும் ராகங்கள் ஏழு (அல்லது எட்டு நாண்கொண்ட பரிவாதினி என்னும் யாழ் மூலம் மீட்ட ஏற்றன எனத் தெரிய வருகிறது. பரிவாதினி எனனும் இந்த யாழ் புதுக்கோட்டைக்கே உரித்தானது என்பதை குடுமியான்மலை, திருக்கோகர்ணம், மலையக் கோவில், திருமயம் ஆகிய இடங்களில் உள்ள கல் வெட்டு செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

❋ புதுக்கோட்டையை ஆண்ட ராஜா விஜய ரகுநாதத் தொண்டைமான் (1730-1769) ஒரு பெரிய இசை மேதை. தமிழ் மற்றும் தெலுங்கில் பல பாடல் களை இயற்றியும், பாடியும் இருக்கிறார்.

❋ 18-ம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் வாழ்ந்த (இசை) மாமுனி சதாசிவ பிரம்மம் புதுக்கோட்டையில் சில காலம் தங்கியிருந்து பல பக்திப் பாடல்களை (கீர்த்தனைகள்) பாடியுள்ளார்.

❋ இசைமேதை தியாகராசர் புதுக்கோட்டை அரசவைக்கு வந்திருக்கிறார்.

❋ புதுக்கோட்டை தொண்டைமான் மன்னர்கள் அரசவையில் புகழ்மிக்க இசை வல்லுநர் பலர் இருந்தனர். ஒரு சமயம் வீணை சுப்புக்குட்டி அய்யர் என்னும் வித்வானுக்கு கனகாபிஷேகம் செய்யப்பட்டிருக்கிறது.

❋ தனியரசாக (சமஸ்தானமாக) இருந்தபோது புதுக்கோட்டை நகரில் சங்கீத மழை சகிதம் இரவு காவல் பணி நடைபெறுவது வழக்கம். இரவில் குறிப்பிட்ட நேரங்களில் நகரின் நான்கு முக்கிய வீதி களின் வழியாக, நான்கு முறை, விதவிதமான இசைக் கருவிகளை இசைத்துக் கொண்டு காவல் பணிக்குழு ரோந்து சுற்றிவருவது வழக்கமாக இருந்தது. முதல் சுற்றில் நாதஸ்வரம், ஒத்து, தாளம், தவில் ஆகிய வாத்தியங்களுடனும் (இது மேல் பறை எனப் பட்டது) இரண்டாவது சுற்றில் மிருதங்கம், தாளம் ஆகியவற்றுடன் ஆடிக் கொண்டும், பாடிக் கொண்டும் (இது கரிப்பறை எனப்பட்டது) மூன்றாவது சுற்றில் மணியோசையுடன் கூடிய கருவிகளை இசைத்துக் கொண்டும் (இது மணிப் பறை எனப்பட்டது) நான்காவது சுற்றில் தப்பு, தாரை போன்ற மிகப் பெரிய பறைகளை இசைத்துக் கொண்டும், (இது தப்புப்பறை எனப்பட்டது) நகரைச் சுற்றி வருவது வழக்கம். குறிப்பிட்ட இசைக் கருவியின் ஓசையைக் கொண்டு அப் போதைய நேரத்தை தெரிந்து கொள்ள இயலும்.

❋ திருக்கோகர்ணம் பிரகதாம்பாள் கோயிலில் சுமார் 18 வகையான இசைக் கருவிகள் உபயோகத் திலிருந்தன.

❋ கேரள நாட்டு மன்னர் சுவாதி திருநாள் (1813-1846) திருக்கோகர்ணம் பிரகதாம்பாள் பேரில் பல பாடல்களை இயற்றிப் பாடியுள்ளார், இதே போன்று தொண்டைமான் மன்னர்களும் திருவனந்தபுரம் பத்மநாதசாமி பேரில் பல பாடல் களை பாடி இருக்கின்றனர்.

❋ மாமுண்டியா பிள்ளை, தட்சிணாமூர்த்தி பிள்ளை, கடம் சுந்தரம் அய்யர், காரைக்குடி வீணை சகோதரர்கள்-சுப்புராம அய்யர், சாம்பசிவ அய்யர்-சிவராம நட்டுவனார், சுவரபத் கிருஷ்ண அய்யர், இலுப்பூர் பொன்னுச்சாமி பிள்ளை ஆகியோர் அக்கால புதுக்கோட்டை இசை வல்லுநர் களுள் சிலர் ஆவார்கள். இந்த இசை பாரம்பரியம் இன்றும் தொடர்ந்து வருகிறது. புகழ் பெற்ற இசை வல்லுநர் பலர் இன்றும் புதுக்கோட்டைக்கு புகழ் சேர்த்து வருகின்றனர்.

சேஷையா சாஸ்திரி :

புதுக்கோட்டை திவானாக இருந்த சேசையா சாஸ்திரி (1878-1894) பற்றிய குறிப்பு களை ஆவணக் குழுவின் இரண்டாவது மலரில் குறிப்பிட்டிருந்தோம். புதுக்கோட்டையில் அவரது பணிக் காலத்தில் அவரது அனுபவங்களை கூறக் கேட்டு தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதய்யர் பல குறிப்புகள் எழுதி வைத்துள்ளார். அவற்றுள் சில! (ஆதாரம் :- உ. வே. சாமிநாதய்யர் எழுதிய- நல்லுரைக் கோவை-3ம் பாகம்-1952)

* வறுத்த கொள் முளைக்குமோ?

அரசு அலுவலர் ஒருவர் அவர் செய்த குற்றங்களுக்கான வேலை நீக்கம் செய்யப்பட்டார். தமக்கு மீண்டும் வேலை பெற அவர் பல வழிகளில் முயன்றார். பல பெரியோர்களின் சிபாரிசுகளை நாடினார். ஆனால் பயனில்லை. தமுடைய குடும்பநிலை, தனது தகுதி, தனது கடந்த கால பணி ஆகியன குறித்து விரிவான ஒரு விண்ணப்பத்தினை தயாரித்து சேஷைய்யா சாஸ்திரிக்கு அனுப்பி வைத்தார். அந்த விண்ணப்பத்தில் சேஷைய்யா சாஸ்திரி எழுதியிருந்த ஆணை "வறுத்த கொள் முளைக்குமோ?".

* அவர் செத்தாலோ?

ஒரு கிராம கர்ணம் கணக்குகளை சரிவர பராமரிக்காத குற்றத்திற்காக வேறு ஊருக்கு மாற்றி உத்திரவிட்டார். சாஸ்திரியார். அவரை மாற்றினால் அந்த கிராமத்தை வேறு யாராலும் நிர்வகிக்க முடியாது என்றும் அவர் மிகவும் நல்லவரென்று ஒரு விண்ணப்பம் தயாரித்து, நூற்றுக் கணக்கான கையெழுத்துடன் அரசுக்கு அனுப்பி வைக்கச் செய்தார் அந்த கர்ணம். அந்த விண்ணப்பத்தின் மீது சேஷைய்யா சாஸ்திரியின் ஆணை. "அவர் செத்தாலோ?".

* தடிகொண்ட அய்யனாரின் தயவு உண்டு !

புதுக்கோட்டை நகரை அழகுபடுத்தி நேரான தெருக்களை அமைத்த பெருமை சேஷய்யா சாஸ்திரியரைச் சாரும். நகரின் கிழக்குப் பகுதியில் மார்த்தாண்ட பைரவபுரம் என்றதொரு அழகிய குடியிருப்புப் பகுதியை நிர்மாணிக்க சாஸ்திரியார் விரும்பினார். (இது தற்போது மார்த்தாண்டபுரம் என்று வழங்கப்படுகிறது) சாலை அமைக்கப்பட வேண்டிய இடத்தில் பெரிய ஆலமரம் ஒன்றும் அதன் கீழ் அய்யனார் கோவிலொன்றும் இருந்தன. அதற்கு தடிகொண்ட அய்யனார்கோவில் என்று பெயர்! சாலை அமைக்க ஆலமரமும் கோயிலும் தடையாக இருந்தன. மரத்தையும் கோயிலையும் அகற்ற ஆஸ்திகப் பெருமக்களுக்கு விருப்பமில்லை ஆனால் சாஸ்திரியாரின் திட்டத்தை எதிர்க்கவும் மனமில்லை! இதையறிந்த சாஸ்திரியார் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து ஒரு திட்டம் தீட்டினர் ஆலமரத்தை வெட்டிவிட்டு தடிகொண்ட அய்யனாருக்கு வேறு ஒரு கோயில் கட்டி அங்கு அவரை குடியேற்றி விடலாம் என எண்ணினார். தகாத செயலெனறு கடுத்தனர் பலர் "நல்ல காரியத்திற்கு அய்யனாரின் அங்கீகாரம் எனக்குக் கிடைக்கும்" எனக் கூறி அய்யானருக்கு ஒரு விண்ணப்பம் எழுதி அவர் முன் வைக்கச் செய்தார். அதில் 'நகரத்தை பாதுகாக்கும் கலியுக தெய்வமான தாங்கள், நெடுங்காலமாக மழையால் நனைந்தும், வெயிலால் உலர்ந்தும் இவ்விடத்தில் எழுந்தருளியிருக்கும் சிரமம் நீங்கி, நான் தங்களுக்குப் புதிதாக கட்டியுள்ள கோயில் சென்று குடியேறினால் நகரை அழகுபடுத்தும் எனது பணி சிறக்கும், தங்களுக்கும் பெருமை கிட்டும் எனது செயலுக்கு அங்கீகாரம் வேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தார். அதன்படியே அய்யனாரை புதிய கோயிலுக்கு கொண்டு சென்று கும்பாபிஷேக பூசைகள் செய்துவைத்தார். மக்கள் வியந்தனர். ஆனால் ஆலமரத்தை வெட்டுவதற்கு யாரும் முன் வரவில்லை. சாஸ்திரியாரே கோடாரியை கையிலேந்திச்சென்று முதன் முதலில் வெட்டினார் கூடியிருந்த மக்கள், சாஸ்திரியாருக்கு துன்பம் ஏதும் நிகழவில்லை என்பதைக் கண்டதும், பின்பு மரத்தை வெட்ட சம்மதித்தனர். மரம் வெட்டப்பட்டது. அழகிய சாலை அமைந்தது. தற்போது ஆலங்குடி சாலையில் குடிகொண்டிருக்கும் தடிகொண்ட அய்யனார்தான் இந்த அய்யனார்!

வேண்டுகோள் :

புதுக்கோட்டை மாவட்ட வரலாற்று ஆவணக்குழுவிற்கு தங்களிடம் உள்ள பழைய கடிதங்கள். பதிவேடுகள். பத்திரிகைகள், புத்தகங்கள், செப்பேடுகள் ஆகியவற்றைக் கொடுத்து உதவி நமது பகுதியின் வரலாற்றை முழுமையாக தொகுக்க உதவும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

The Pudukkottai District Historical Archives Committee Newsletter is Published by the Chairman of the Committee Thiru M. Kutralingam I. A. S., Collector, Pudukkottai.
Editor : J Raja Mahamed M. A Curator, Government Museum, Pudukkottai.

நூல் - அஞ்சல்
இந்திய அரசுப்பணிக்கு மட்டும்

புதுக்கோட்டை மாவட்ட
வரலாற்று ஆவணக்குழு
செய்தி மலர்.

269. சரஸ்வதி மஹால் நூலகம்,
தஞ்சாவூர்.

அனுப்புதல் :
மாவட்ட ஆட்சித்ததலைவர்,
புதுக்கோட்டை.

Printed at : MADRAS RIPON PRESS, PUDUKKOTTAI.